9th April 1960]

விரும்புகிறார்களோ, அவர்களுக்கு மட்டிலாவது தேர்ந்தெடுக்கும் (ஆப்ஷனல்) பாடமொழியாக அமைக்கும் முறையிலே, தமிழ் படிக்க இருக்கும் முட்டுக் கட்டையை அகற்ற, தடையை நீக்க, அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் சொன்னேன். ப்ரீயுனிவர்ஸிடி வகுப்பே இல்லாமல் போகப் போகிறது. இடைக்காலத்தில், அதுவும் எல்லா மாணவர்களுக்கும் இல்லாமல், ஒரு சிலருக்காக மட்டும் தனிப்பட்ட முயற்சிக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

SRI A. A. RASHEED: Is it a fact that a few years back the National College, Tiruchirappalli, and the Municipal College, Salem, introduced the regional language as medium of instruction and later on gave it up for want of popular support and because of difficulties experienced ?

THE HON. SRI C. SUBRAMANIAM: That is always the difficulty with half-hearted attempts made without making full preparation, when we launch upon a new project. That is why we are trying our best to see that preparations are made adequately and proper atmosphere created and all the difficulties in implementing the scheme are removed.

SRI A. GOVINDASAMY : ஸார், வட்டார மொழியிலே பாடம் கற்பிப்பது என்ற போது, கோயம்புத்தூர் மாவட்டத்தை முதலில் எடுக்கக் காரணம் என்ன ? மற்ற மாவட்டங்களில் எடுத்தால் எதிர்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலில் சர்ச்சைக்கு வந்தது, சர்க்கார் பள்ளியில் செய்வதா அல்லது, தனிப்பட்டோர் பள்ளியில் செய்வதா என்பது. அதை முதலில் தீர்மானிக்க வேண்டியிருந்தது. தனிப்பட்டவர்கள் கல்லூரியைவிட, சர்க்கார் கல்லூரியில் வைப்பதே சரி என்று தீர்மானிக்கப்பட்ட பிறகு, எந்தக் கல்லூரி என்ற பிரச்னை எழுந்தது. இன்று சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் ஆர்ட்ஸ் கல்லூரிகள் இருக்கின்றன. இங்கே, பல மொழி பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். முன்பு இதுவே "மகம்மடன் காலேஜ்" ஆக இருந்தது, அதைப்போய் தமிழுக்கு எடுத்தால், நகரத்தில் பல மொழி பேசுகிறவர்கள் இருப்பதனால், அது தவறாக இருக்கும் என்று நினைத்து, கோயம்புத்தூர் கல்லூரியை, அதுவும் வைஸ்-சான்சலர் அவர்களே கோயம்புத்தூர் கல்லூரியே சிறந்தது என்றதின் பேரில், அது தேர்ந்தெடுக்கப்பட்டது.

SRI T. S. RAMASWAMI : குறிப்பிட்ட கல்லூரியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களுக்கான கலைச் சொற்கள் முதலியவை ஸ்டாண்டர்டைஸ் செய்து, எல்லா மாணவர்களுக்கும் வழக்கமாக வரக்கூடிய அளவுக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் ? மேல் படிப்புக்குத் தடையில்லாமல், மாணவர்களுக்கு நல்ல முறையிலே அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலைச் சொற்கள் பகுதி பகுதியாக அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. வழக்கமாக வருவதற்கு, கலைச்சொற்கள் வழக்கத்தில் வரவேண்டும். அப்படி வரும் காலத்தில், மாறுதல்கள் வேண்டும் என்றால், கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன்.

Raw Film Factory

* 649 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to purchase shares of the raw film factory by this Government; and

(b) if so, the amount of share to be purchased ?

[9th April 1960

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No. Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: May I know whether the raw film factory to be established in Ootacamund will be entirely run by the Government of India? In view of the importance of the factory, why should not this Government take some shares in it?

THE HON. SRI R. VENKATARAMAN: If the Government of India take up the factory, we can utilise the resources we have for starting some more factories.

Kathayee Ammal Mutt

* 650 Q.—SRI P. S. SANTHANAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா திருவண்ணுமலே டவுனில் உள்ள காத்தாயி அம்மாள் மடத்திற்கு சொந்தமான திருவண்ணுமலே டவுன் திருவூடல் தெருவில் உள்ள கட்டிடங்களே அந்த மடத்தின் டிரஸ்டி ஒருவர் பதினுன்கு ஆயிரத்திற்கு ஒரு நபருக்கு விற்ற விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியாயின், அதன் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government have notified their intention to extend the provisions of the Hindu Religious and Charitable Endowments Act, 1959, to this charitable endowment on this and other irregularities committed by the present agent of the Trust.

Gandhigram

* 651 Q.—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள காந்தி கிராமத்தை ஒரு சர்வ கலாசாலேயாக உயர்த்த யோசனே உண்டா?

(ஆ) அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. P. SARATHI: காந்திக் கிராமத்திலிருந்து ஏதாவது கோரிக்கை வந்ததா?

THE HON. SRI C. SUBRAMANIAM: என்னிடம் கோரிக்கை எதுவும் காணேம்.

SRI A. V. P. ASAITHAMBI: இந்த காந்திக் கிராமத்திற்கு இது வரை சர்க்கார் என்னென்ன உதவிகள் செய்து வருகிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI K. ANBAZHAGAN: கிராமாந்தரப் பல்கலேக் கழகம் தமிழ் நாட்டில் காந்தி கிராமத்தில் ஏற்படுத்துவது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறதா, அல்லது வேறு இடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அங்கத்தினர் இரு ஸ்தாபனங் களேயும் குழப்பிக் கொள்ளுகிருர்கள் என்று நினேக்கிறேன். ரூரல்யுனிவர்ஸிடி வேறு, ரூரல் இன்ஸ்டிட்யூட் வேறு. ரூரல் இன்ஸ்டிட்யூட் தான் இந்தியாவில்